
100/100

# தமிழ்ப் பாடத்தில்
## அதிக மதிப்பெண் பெற என்ன செய்யவேண்டும்? வாங்க பார்ப்போம் !



***அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே…***

மார்ச் 2020ல் பொதுத்தேர்வு எழுதப் போகும் நீங்கள் அதிக மதிப்பெண் பெற்று வெற்றி வாகை சூடிட எங்களுடைய வாழ்த்துகளை உரித்தாக்குகின்றோம். 2019 - 2020ஆம் கல்வியாண்டில் தமிழக அரசால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய பாடத்திட்டத்தின்படி முதன் முதலாக தேர்வு எழுதப் போகும் நீங்கள் ஒவ்வொரு பாடத்திலும் எவ்வாறு முழு மதிப்பெண்களைப் பெறலாம் என்பதை எடுத்துக் கூறும் வகையில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் நீங்கள் எழுதும் முதல் தேர்வான தமிழ்ப் பாடத்தில் முழு மதிப்பெண்களையும் எவ்வாறு அள்ளலாம்….? அதற்கு எதைப் படிக்க வேண்டும்….? எவ்வாறு படிக்க வேண்டும்? என்பதை பற்றியெல்லாம் என்பதை விரிவாகக் காணலாம்…

காலாண்டுத் தேர்வு வரை தமிழ்ப் பாடத்தேர்வு இரண்டு தாள்களைக் கொண்ட தேர்வாக இருந்தது…பின்னர் தமிழ்ப் பாடத்திற்கு தேர்வானது ஒரே தாளாக அரசு அறிவித்து, அதனடிப்படையிலேயே மார்ச் 2020 பொதுத்தேர்வு நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளது.

திட்டமிட்டு செய்யப்படும் எந்தவொரு செயலும் நிச்சயம் மிகப் பெரிய வெற்றியைத் தரும் என்பது நிறுவப்பட்ட உண்மையாகும்… எனவே மாணவர்களே… திட்டமிடுங்கள் நிச்சயம் சாதிப்பீர்கள்…

தமிழக அரசால் 25.09.2019 அன்று வெளியிடப்பட்ட தமிழ் மாதிரி வினாத்தாளின் அமைப்பைத் தெரிந்து கொண்டால் நாம் திட்டமிடுவதற்கு மிகவும் வசதியாக இருக்கும்.

## ஆசிரியர்களுக்கான தமிழ்க் குறிப்புகள்

*விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியின் போது ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அறிவுரைகளை அறிந்து கொண்டால் நாம் நம் விடைத்தாளில் விடைகளை பிழையின்றி தெளிவாக எழுதிட வழி வகுக்கும்.*

1. நீலம் அல்லது கருப்பு மையினால் விடைகளை மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து, கருத்துப்பிழை, தொடர்பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை இல்லாதிருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
3. எழுத்துப் பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து அவ்வாறு குறைக்கும் மதிப்பெண் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். (உதாரணமாக… ஐந்து மதிப்பெண் வினாவிற்கான விடையில் 6 பிழைகள் இருப்பினும் ஒரு மதிப்பெண் மட்டுமே குறைக்கப்பட வேண்டும். ஒன்றரை மதிப்பெண் குறைக்கப்படக் கூடாது)
4. மனப்பாடப் பாடல்கள் சீர் பிரிக்கப்பட்டு, அடிகள் உரிய வகையில் அமைந்து, நிறுத்தற்குறிகள் சரியாக இடப்பட்டிருந்தால் மட்டுமே முழு மதிப்பெண் வழங்க வேண்டும்.
5. நெடு வினாக்களுக்கான விடைகள் பத்தி பிரிக்கப்பட்டும், உள் தலைப்புகள் இடப்பட்டும் உரிய இடங்களில் செய்யுள் மேற்கோள் கொடுக்கப்பட்டும் இருந்தால் மட்டுமே முழு மதிப்பெண் வழங்க வேண்டும்.

மேற்கண்ட வழி முறைகள் மதிப்பீடு செய்யும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டதாக இருப்பினும் தேர்வு எழுதும் மாணவர்களாகிய நீங்களும் அறிந்து கொண்டால் நூற்றுக்கு நூறு என்பது எளிதில் கை கூடும்.

www.kalvikural.com


## மாணவர்களுக்கான தமிழ்க் குறிப்புகள்

1. விடைகளை வினாத்தாள் வரிசையிலேயே எழுதுவதுதான் சிறந்தது.
2. கண்டிப்பாக வினா எண்ணை குறிப்பிடாமல் எழுதாதீர்கள்.
3. இரண்டு / மூன்று / ஐந்து மதிப்பெண் விடைகளை எழுதும் போது ஒரு விடைக்கும் மற்றொரு விடைக்கும் இடையே ஒரு வரி விட்டு எழுதவும்.
4. நேரத்தை மிகச் சரியாக திட்டமிடுங்கள்.
5. எழுதப்பட்ட விடைகளை மீண்டும் சரி பார்ப்பதற்கும் நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுங்கள். தேர்வு நேரம் முடியும் வரை எழுதிக் கொண்டிருப்பதை தவிர்ப்பது நல்லது.
6. ஒரே நிற மை பேனாவை மட்டும் பயன்படுத்துங்கள். பல வண்ணப் பேனாக்களை பயன்படுத்தக் கூடாது.
7. ஒவ்வொரு பிரிவு மற்றும் பகுதி ஆகியவற்றை மேலே எழுதி அதன் கீழ் வினா எண்ணை எழுதுங்கள்.
8. ஒரு மதிப்பெண் வினாக்களுக்கான விடைகளை முதலில் சரியாக எழுதும் போது நம்மைப் பற்றிய நேர்மறை எண்ணம் மதிப்பீடு செய்பவரின் உள்ளத்தில் ஏற்படும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.
9. தலைப்பை மட்டும் ஒரு பக்கத்தின் கடைசியில் எழுதி விடையை அடுத்த பக்கத்தில் எழுதுவதை தவிர்க்க வேண்டும்.
10. ஒற்று எழுத்து (மெய்யெழுத்து) வரியின் முதலில் எழுதுவதை தவிருங்கள்.
11. சொற்களைப் பிரித்து எழுதுவதை தவிர்க்கவும்.
12. விடைகளை அடித்தல், திருத்தல் இல்லாமல் அழகாக, தெளிவாக எழுத வேண்டும். வினாக்களுக்கான விடையெழுதுதல் என்பது ஒரு கலை. அதை நாம் தொடர் பயிற்சியின் மூலம் கண்டிப்பாக கற்றுப் பயன்படுத்தலாம்.
13. மனப்பாடப் பாடல்களை எழுதும் போது பாடநூலில் உள்ளது போல் எழுதுங்கள். வரிகளை மடக்கி எழுதாதீர்கள்.
14. கடிதத்தை ஒரே பக்கத்தில் தொடங்கி அதே பக்கத்தில் முடித்தல் நல்லது.
15. மாதிரி வினாத்தாள்களைக் கொண்டு நாம் அவ்வப்போது முழு தேர்வையும் எழுதி பார்ப்பது மிகுந்த பலனைத் தரும். நேரத்தினைத் திட்டமிட பயன்படும்.
16. தேர்வறைக்கு செல்வதற்கு முன் நம்பிக்கையோடு, நேர்மறைச் சிந்தனையோடு செல்லுங்கள். நாம் படித்தது மட்டுமே வரும், எந்த கேள்விக்கும் நம்மால் விடையளிக்க முடியும் என்ற சிந்தனையோடு மட்டுமே தேர்வு எழுத தொடங்குங்கள்.
17. நூற்றுக்கு நூறு என்பது மிக எளிது.. அதற்கான முயற்சியும் பயிற்சியும் நம்மிடம் உள்ளது. நான் சாதித்துக் காட்டுவேன் என்று எண்ணுங்கள்... எண்ணமே நம்மை நல்வழி நோக்கி செலுத்தும்.
18. எவரெஸ்ட் ஓர் உயரமல்ல.... முயற்சிச் சிறகுகள் முறியும் வரை... ஆகவே முயற்சியும் பயிற்சியும் உங்கள் ஓர் உயர்ந்த இடத்திற்கு இட்டுச் செல்லும் என்பதை உணருங்கள்.. வாழத்துகள்.... நூற்றுக்கு நூறு எட்டிவிடும் தூரத்தில்... முயன்று படியுங்கள்... தொட்டு விடலாம்... சிகரத்தை.....வாழ்த்துகள்... நன்றி..

### நேர மேலாண்மை :



| | | |
|---|---|---|
| கேள்வித்தாள் வாசித்தல் | | 15 நிமிடங்கள் |
| **ஒரு** மதிப்பெண் வினாக்கள் | **15** | **20** நிமிடங்கள் |
| **இரண்டு** மதிப்பெண் வினாக்கள் | **9** | **30** நிமிடங்கள் |
| **மூன்று** மதிப்பெண் வினாக்கள் | **4** | **25** நிமிடங்கள் |
| **ஐந்து** மதிப்பெண் வினாக்கள் | **5** | **45** நிமிடங்கள் |
| **எட்டு** மதிப்பெண் வினாக்கள் | **3** | **45** நிமிடங்கள் |
| திருப்புதல் | | **15** நிமிடங்கள் |
| ***மொத்த கால அளவு*** | | ***15 நிமிடங்கள் + 3 மணி*** |
| ***மொத்த மதிப்பெண்கள்*** | | ***100*** |

## பத்தாம் வகுப்பு - தமிழ் - வினாத்தாள் ஒரு பார்வை

**உரைநடை, செய்யுள் (கவிதைப்பேழை), துணைப்பாடம் (விரிவானம்), இலக்கணம், மொழிப்பயிற்சி** வினாத்தாள், ஐந்து (I - V) பகுதிகளாக 1, 2, 3, 5, 8 என்னும் மதிப்பெண்கள் அடிப்படையிலும் மொத்த மதிப்பெண்கள் 100 என்றும் அமைந்துள்ளது.

***இரண்டு கட்டாய வினாக்கள் உள்ளன.***

- பகுதி – II பிரிவு – 1ல் **21-வது வினா** திருக்குறள்.
- பகுதி – III பிரிவு – 2ல் **34-வது வினா** மனப்பாடப்பகுதி.

| | | |
|---|---|---|
| மொத்த வினாக்கள் | - | 45 |
| எழுத வேண்டியவை | - | 38 |
| மொத்த மதிப்பெண்கள் | - | 159 |
| எழுத வேண்டியவை | - | 100 |
| வினாத்தாளின் மொத்த வினாக்களின் எண்ணிக்கை | - | 52+(1) |

| வினாப்பகுப்பு | - | மதிப்பெண் |
|---|---|---|
| பகுதி - I | - | 15 (15×1=15) |
| பகுதி - II | - | 9 (9×2=18) |
| பகுதி - III | - | 6 (6×3=18) |
| பகுதி - IV | - | 5 (5×5=25) |
| பகுதி - V | - | 3 (3×8=24) |
| **மொத்தம்** | - | 38 (100) |

## வினாத்தாள் வடிவமைப்பு

| உட்பிரிவு | வினா எண் | தலைப்பு | கேட்கப்படும் கேள்விகள் | எழுத வேண்டிய கேள்விகள் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|
| **பகுதி - I : ஒரு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 15)** | | | | | |
| | 1 - 11 | உரைநடை | *3* | *3* | *14* |
| | | செய்யுள் | *6* | *6* | |
| | | இலக்கணம் | *3* | *3* | |
| | | மொழிப்பயிற்சி | *3* | *3* | |
| | 12 - 15 | செய்யுளைக் கொடுத்து 4 வினாக்கள் | *4* | *4* | |
| **பகுதி – II : இரண்டு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 18)** | | | | | |
| **பிரிவு : 1** | 16 - 21 | உரைநடை மற்றும் செய்யுள் | *6* | *4* | *8* |
| | **குறிப்பு** : 21 - கட்டாய வினா - மனப்பாடத் திருக்குறள். | | | | |
| **பிரிவு : 2** | 22 - 28 | இலக்கணம் மற்றும் மொழிப்பயிற்சி | *7* | *5* | *10* |
| **பகுதி – III : மூன்று மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 18)** | | | | | |
| **பிரிவு : 1** | 29 - 31 | உரைநடை | *3* | *2* | *6* |
| **பிரிவு : 2** | 32 - 34 | செய்யுள் | *3* | *2* | *6* |
| | **குறிப்பு** : 34 - கட்டாய வினா - மனப்பாடச் செய்யுள் | | | | |
| **பிரிவு : 3** | 35 - 37 | இலக்கணம் | *3* | *2* | *6* |
| **பகுதி – IV : ஐந்து மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 25)** | | | | | |
| 38 - 42 | 38 | செய்யுள் நெடுவினா | *2* | *1* | *5* |
| | 39 | கடிதம் | *2* | *1* | *5* |
| | 40 | படம் உணர்த்தும் கருத்து, கவிதை, பத்தி | *1* | *1* | *5* |
| | 41 | படிவம் | *1* | *1* | *5* |
| | 42 | மொழிப்பயிற்சி | *2* | *1* | *5* |
| **பகுதி – V : எட்டு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 24)** | | | | | |
| 43 - 45 | 43 | உரைநடை நெடுவினா | *2* | *1* | *8* |
| | 44 | துணைப்பாடம் | *2* | *1* | *8* |
| | 45 | பொதுக்கட்டுரை | *2* | *1* | *8* |

## 10ஆம் வகுப்பு – பொதுத்தமிழ்

### அரசு மாதிரி வினாத்தாள் ஒரு பார்வை

| | | |
|---|---|---|
| **பகுதி - I : ஒரு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 15)** | | |
| **1 முதல் 11 வரை** | உரைநடை - 3 வினாக்கள், செய்யுள் - 2 வினாக்கள் இலக்கணம் - 3 வினாக்கள், மொழிப்பயிற்சி - 3 வினாக்கள் | **11 x 1 = 11** |
| **12 முதல் 15 வரை** | பாடப்பகுதியில் உள்ள ஏதேனும் ஒரு செய்யுள் கொடுக்கப்பட்டு அதிலிருந்து நான்கு வினாக்கள் கேட்கப்படும். இதுவும் பலவுள் தெரிக வகைதான். | **4 x 1 = 4** |
| **பகுதி – II : இரண்டு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 18)** | | |
| **16 முதல் 21 வரை**<br>**குறிப்பு** : ஆறு கொடுத்து நான்கு எழுதுமாறு அமைந்துள்ளது. | **பிரிவு : 1** உரைநடை - 3, செய்யுள் - 3<br>**குறிப்பு** :உரைநடையில் விடைக்கேற்ற வினா இடம் பெற்றுள்ளது.<br>**21** - கட்டாய வினா - மனப்பாடத் திருக்குறள். | **4 x 2 = 8** |
| **22 முதல் 28 வரை** (5/7)<br>**குறிப்பு** : ஏழு கொடுத்து ஐந்து எழுதுமாறு அமைந்துள்ளது. | **பிரிவு : 2** இலக்கணம் - 3, மொழிப்பயிற்சி - 4<br>**குறிப்பு** : இலக்கணப்பகுதியில் பகுபத உறுப்பிலக்கண வினா இடம்பெற்றுள்ளது. கலைச்சொற்கள் வினாவிற்கு மாற்றாக, செவிமாற்றுத் திறனார்களுக்கான மாற்றுவினாவாக எளிய மொழித்திறன் பயிற்சி இடம்பெற்றுள்ளது. | **5 x 2 = 10** |
| **பகுதி – III : மூன்று மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 18)** | | |
| **குறிப்பு** : ஒவ்வொரு பிரிவிலும் மூன்று கொடுத்து இரண்டு எழுதுமாறு அமைந்துள்ளது. | | |
| **29 முதல் 31 வரை** | **பிரிவு : 1** உரைநடை - 3 வினாக்கள்<br>**குறிப்பு** : உரைநடைப் பகுதியில் ஒரு உரைப்பத்தி 3 வினாக்களுடன் இடம்பெற்றுள்ளது. | **2 x 3 = 6** |
| **32 முதல் 34 வரை** | **பிரிவு : 2** செய்யுள் - 3 வினாக்கள்<br>**34** - கட்டாய வினா - மனப்பாடச் செய்யுள்<br>**குறிப்பு** : இரண்டு கொடுத்து ஒன்று எழுதுமாறு அமைந்துள்ளது. | **2 x 3= 6** |
| **35 முதல் 37 வரை** | **பிரிவு : 3** இலக்கணம் - 3 வினாக்கள்<br>**குறிப்பு** : இலக்கணப்பகுதியில் சிறுவினா, அலகிடுதல், அணி, பா போன்ற வினாக்கள் இடம்பெற்றுள்ளன. | **2 x 3 = 6** |
| **பகுதி – IV : ஐந்து மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 25)** | | |
| **38 முதல் 42 வரை** | **38** செய்யுள் நெடுவினா **குறிப்பு** : இரண்டு கொடுத்து ஒன்று எழுதுமாறு அமைந்துள்ளது.<br>**39** கடிதம் **குறிப்பு** : இரண்டு கொடுத்து ஒன்று எழுதுமாறு அமைந்துள்ளது.<br>**40** படம் உணர்த்தும் கருத்து - ஐந்து தொடர்கள், பத்தி, கவிதை ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று இடம் பெறும்.<br>**41** படிவம் **குறிப்பு** :அரசு வெளியிட்டுள்ள நான்கு படிவங்களில் ஒரு படிவம் நிரப்புதல் வடிவில் இடம்பெற்றுள்ளது.<br>**42** பாடப்பகுதி மொழிப்பயிற்சி (அ) மொழிபெயர்ப்புப் பகுதி **குறிப்பு** : மொழிப்பெயர்ப்பு வினாவிற்கு மாற்றாக, செவிமாற்றுத் திறனாளர்களுக்கான வினாவாக உரைப்பத்தியைப் படித்து 5 வினாக்களுக்கு விடையளிக்கும் பகுதி இடம்பெற்றுள்ளது. | **5 x 5 = 25** |
| **பகுதி – V : எட்டு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 24)** | | |
| **குறிப்பு** : ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கொடுத்து ஒன்று எழுதுமாறு அமைந்துள்ளது. | | |
| **43 முதல் 45 வரை** | **43** உரைநடை நெடுவினா<br>**44** துணைப்பாடம் நெடுவினா<br>**45** பொதுக்கட்டுரை | **3 x 8 = 24** |
| **குறிப்பு** : பாடநூலின் உரைநடை நெடுவினாக்கள் / துணைப்பாட நெடுவினாக்கள் / கட்டுரைகள் மட்டுமின்றி பாடப்பகுதி சார்ந்து உருவாக்கப்பட்ட வினாக்களும் இடம்பெற்றுள்ளன. | | |

# முழு மதிப்பெண்கள் பெற கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்

*வினாத்தாள் அமைப்பினைத் தெளிவாக புரிந்து நாம் படித்தால் கண்டிப்பாக தமிழ்ப் பாடத்தில் முழு மதிப்பெண்களை பெற முடியும். அதற்கு கீழ்க்கண்ட குறிப்புகளை மனதில் இருத்திக் கொள்ளுங்கள்.*

## பகுதி – I : ஒரு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 15)

★ வினாத்தாளின் முதல் பகுதியில் 15 ஒரு மதிப்பெண் வினாக்கள் கேட்கப்படும். அவற்றுள் முதல் **11 வினாக்கள்** உரைநடை, செய்யுள், இலக்கணம், மொழிப் பயிற்சி ஆகியவற்றிலிருந்து கேட்கப்படும். **12லிருந்து 15** வரையுள்ள நான்கு வினாக்கள் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல் என்ற வகையில் கேட்கப்படும்.

☞ மாணவர்கள் பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள 45 ஒரு மதிப்பெண் வினாக்களையும் நன்றாக உணர்ந்து படித்துக் கொள்ளுங்கள். **இந்த வினாக்களிலிருந்துதான் ஒரு மதிப்பெண் வினாக்கள் கேட்கப்படும் என்ற வரையறை இல்லை.** ஆனாலும் இவற்றிலிருந்து வினாக்கள் கேட்கப்படலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அந்த வினாக்களில் ஏதேனும் மாற்றங்கள் செய்து வினாக்கள் கேட்கப்படும்.

☞ **உதாரணமாக** <u>பெரிய மீசை சிரித்தார்</u> என்ற தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு என்ன? என்ற வினாவிற்கான விடை அன்மொழித் தொகை.

☞ ஆனால் <u>பெரிய மீசை</u> சிரித்தார் என்ற தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு என்ன? என கேட்கப்பட்டால் அவ்வினாவிற்காக விடை பண்புத்தொகை.

- பெரிய மீசை என்பது பண்புத்தொகை... பெரிய மீசை சிரித்தார் என்பது அன்மொழித்தொகை.
- இது சிறு வேறுபாட்டை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

★ பாடநூலில் உள்ள வினாக்களில் சிறு மாற்றம் செய்து பொதுத் தேர்வில் வினாக்கள் கேட்கப்படலாம். ஆகவே வினாவை உன்னிப்பாக படித்து பார்த்து விடையைத் தேர்வு செய்ய வேண்டும்.

☞ **எடுத்துக்காட்டாக**, "மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே – என்ற வினாவிற்கு விடையாக திருப்பதியும் திருத்தணியும் ஆகும்.

☞ ஆனால் இவ்வினாவில் சிறு மாற்றம் செய்து, "மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" - வேலவன் குன்றமும் மாலவன் குன்றமும் குறிப்பவை முறையே – எனக் கேட்கப்பட்டால் அதற்கு விடையாக திருத்தணியும் திருப்பதியும் என்பதாகும். எனவே வினாவை கவனத்துடன் படித்துணர்ந்து விடையை சரியாக தேர்வு செய்ய வேண்டும்.

★ பாடநூலில் உள்ள மொழிப் பயிற்சிகளைக் கவனத்துடன் படித்தால் மதிப்பெண்களை முழுமையாகப் பெறலாம். தொகைச் சொற்கள், இலக்கணக் குறிப்பு, தொடர் வகைகள், வினா வகைகள், விடை வகைகள் போன்ற பகுதிகளில் அதிக கவனம் செலுத்துங்கள்.

★ இதைத் தவிர பாடநூலின் உள்ளிருந்து ஒரு மதிப்பெண் வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் நன்கு படித்து கொள்ளுங்கள்... வினாக்களையும் புரிந்து படிக்கவும்... வினாக்களை மாற்றிக் கேட்டாலும் விடையளிக்கும் வகையில் நாம் படிக்க வேண்டும்.

★ உரைநடைப் பகுதிகளில் வண்ண எழுத்துகளால் குறிப்பிடப்பட்டுள்ள பாடல் வரிகள், மேற்கோள்கள் போன்றவற்றையும் மனதில் இருத்திக் கொள்ளுங்கள். கூடுதலான வினாக்கள் பாடநூலின் உள்ளிருந்து கேட்கப்படவே வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே செய்யுள், உரைநடை, இலக்கணம், மொழிப் பயிற்சி ஆகிய பகுதிகளை மிகுந்த கவனத்துடன் ஒவ்வொரு வரியாக உணர்ந்து படித்தால் எத்தகைய வினாக்களைக் கேட்டாலும் விடையளிக்கலாம்.

★ வினா எண்கள் 12லிருந்து 15 வரையிலான வினாக்கள் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க என்ற அமைப்பில் கேட்கப்படும்.

- பாடநூலில் உள்ள செய்யுள்களை உன்னிப்பாக படித்துக் கொள்ளுங்கள்.
- **செய்யுள் இடம் பெற்றுள்ள நூலின் பெயர், ஆசிரியர் பெயர், இலக்கணக் குறிப்பு, பொருள் மற்றும் அடி எதுகைகள்** ஆகியவற்றை நன்கு படித்துக் கொள்ளுங்கள்.
- பெரும்பாலும் தொடர்நிலைச் செய்யுள் அல்லாத செய்யுள் பகுதியிலிருந்தே வினாக்கள் கேட்கப்பட வாய்ப்புகள் அதிகம்.
- எனவே அவற்றில் மிகுந்த கவனம் செலுத்துங்கள். பின்வரும் அட்டவணையை எப்போதும் மனதில் ஏற்றிக் கொள்ளுங்கள்

## செய்யுள் பகுதி

| பாடல் வரிகள் (தொடங்கும் சொல்) | இடம் பெற்றுள்ள நூல் | நூலாசிரியர் பெயர் |
|---|---|---|
| அன்னை மொழியே<br>தென்னன் மகளே<br>செந்தமிழே<br>உந்தி உணர்வெழுப்ப | கனிச்சாறு | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| முத்தமிழ் துய்ப்பதால் | இரட்டுற மொழிதல் (தனிப்பாடல் திரட்டு) | சந்தக் கவிமணி தமிழழகனார் |
| காற்றே வா | பாரதியார் கவிதைகள் | பாரதியார் |
| நனந்தலை உலகம்<br>சிறுதாம்பு தொடுத்த | முல்லைப்பாட்டு | நப்பூதனார் |
| விருந்தினனாக ஒருவன் | காசிக்காண்டம் | அதிவீரராம பாண்டியர் |
| அன்று அவண்<br>நும்இல் போல | மலைபடுகடாம் | பெருங்கௌசிகனார் |
| வாளால் அறுத்துச் | பெருமாள் திருமொழி | குலசேகராழ்வார் |
| விசும்பில் ஊழி<br>செந்தீச் சுடரிய | பரிபாடல் | கீரந்தையார் |
| அருளைப் பெருக்கி | நீதி வெண்பா | கா.ப.செய்குதம்பிப் பாவலர் |
| புண்ணியப் புலவீர் யான் | திருவிளையாடற்புராணம் | பரஞ்சோதி முனிவர் |
| இந்தப் பூவைத் தொடுப்பது | பூத்தொடுத்தல் | உமா மகேஸ்வரி |
| செம்பொ னடிச்சிறு | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | குமரகுருபரர் |
| தண்டலை மயில்களாட<br>வெய்யோன் ஒளி தன் | கம்பராமாயணம் | கம்பர் |
| முதல் மழை விழுந்ததும் | ஏர் புதிதா? | கு.ப. ராஜகோபாலன் |
| இந்தி ரன்முதற் திசாபாலர் | மெய்க்கீர்த்தி | இரண்டாம் இராசராச சோழன் |
| வண்ணமும் சுண்ணமும்<br>தூசும் துகிரும்<br>பகர்வனர் | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| சாளரத்தின் கதவுகள் | ஞானம் | தி.சொ.வேணுகோபாலன் |
| கவிஞன் யானோர்<br>வண்டா யெழுந்து<br>கல்லாய் மரமாய் | காலக் கணிதம் | கண்ணதாசன் |
| பொற்காலமாக இருந்தாலும் | சித்தாளு | நாகூர்ரூமி |
| நவமணி வடக்க யில்போல் | தேம்பாவணி | வீரமாமுனிவர் |

## பகுதி – II : இரண்டு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 18)

★ பகுதி – 2ல் 18 மதிப்பெண்களுக்கான (குறு வினாக்கள்) வினாக்கள் இடம் பெற்றிருக்கும். இப்பகுதி இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கும்.

### பிரிவு - 1

- **முதல் பிரிவில் (16 – 21)** ஆறு வினாக்கள் கொடுக்கப்பட்டு நான்கு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் என்ற அமைப்பில் வினாக்கள் இடம் பெற்றிருக்கும்.
- ஒவ்வொரு வினாவிற்கான விடைக்கும் இரண்டு மதிப்பெண்கள்.
- இதில் 3 வினாக்கள் உரைநடையிலிருந்தும் 3 வினாக்கள் செய்யுள் பகுதியிலிருந்தும் கேட்கப்படும். 16வது வினா (உரைநடை) விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க எனவும் **21வது வினா** (செய்யுள் பகுதி) திருக்குறள் மனப்பாடப் பாடல் கட்டாய வினாவாகவும் கொடுக்கப்பட்டிருக்கும்.
- பாடநூலில் உள்ள குறு வினாக்கள் பகுதிகளிலிருந்தும் உள்ளிருந்தும் இப்பகுதியில் வினாக்கள் கேட்கப்படலாம். 16 மற்றும் 21வது வினாக்களுக்கு நாம் விடையளித்து விட்டால் மீதமுள்ள இரண்டு வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அவ்விரண்டு வினாக்களும் பாடநூல் வினாக்களாக இருக்க வாய்ப்புண்டு. எனவே பாடநூலில் குறு வினாக்களுக்குரிய விடைகளைப் படித்துக் கொள்வது சிறந்தது.

### பிரிவு - 2

★ **பிரிவு – 2ல் (22 – 28)** ஏழு வினாக்கள் கொடுக்கப்பட்டு ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும் என்ற அமைப்பில் இருக்கும். ஒவ்வொரு வினாவிற்கான விடைக்கும் இரண்டு மதிப்பெண்கள்.

- இந்த ஏழு வினாக்களில் இலக்கணப் பகுதியிலிருந்து 3 வினாக்களும் மொழிப் பயிற்சியிலிருந்து நான்கு வினாக்களும் கேட்கப்படும்.
  - பகுபத உறுப்பிலக்கணம்
  - இலக்கண வினாக்கள்
  - தொடர் அமைத்தல்
  - நிறுத்தற்குறியிடுதல்
  - தமிழெண்கள்
  - தொடர் மாற்றம்
  - பழமொழிகளை நிறைவு செய்தல்
  - குறிப்பைப் பயன்படுத்தி விடை தருதல்
  - தொடரைப் படித்து விடையைக் கண்டறிதல்
  - பொருத்தமானவற்றை எடுத்து எழுதுதல்
  - தொகைச் சொற்களை விரித்து எழுதுதல்
  - கலைச்சொற்கள்

  ஆகியவை கேட்கப்படலாம். இப்பிரிவில் உள்ள வினாக்களுக்கு விடையளித்தல் என்பது மிகவும் எளிமையானது. எனவே பாடநூலில் உள்ள மொழிப் பயிற்சிகளில் எடுக்கப்படும் தொடர் பயிற்சி முழு மதிப்பெண்களையும் பெற்றுத் தரும் என்பதில் ஐயமில்லை.

## பகுதி – III : மூன்று மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 18)

★ **பகுதி – 3ல்** 18 மதிப்பெண்களுக்கான (சிறு வினாக்கள்) வினாக்கள் இடம் பெற்றிருக்கும். இப்பகுதி மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கும்.

### பிரிவு - 1

★ **முதல் பிரிவில் (29 - 31)** உரைநடைப் பகுதியிலிருந்து மூன்று வினாக்கள் கொடுக்கப்பட்டு இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் என்ற வகையில் அமைந்திருக்கும். ஒவ்வொரு வினாவிற்கான விடைக்கும் மூன்று மதிப்பெண்கள்.

- **31ஆவது வினா** உரைப்பத்தியைப் படித்து மூன்று வினாக்களுக்கு விடையளிக்க என கேட்கப்பட்டிருக்கும். இது மிகவும் எளிமையானது என்பதால் இவ்வினாவிற்கு கண்டிப்பாக விடையளித்திடுங்கள்.
- மற்ற இரண்டு வினாக்கள் பாடநூல் வினாக்களிலிருந்தோ அல்லது உள்ளிருந்தோ கேட்கப்படலாம். எனவே பாடநூலில் உள்ள உரைநடை சிறுவினாக்களுக்கான விடைகள் அனைத்தையும் கவனமாக புரிந்து கொண்டு படித்திடுங்கள்.

## பிரிவு - 2

★ **பிரிவு – 2 ல் (32 – 34)** செய்யுள் பகுதியிலிருந்து மூன்று வினாக்கள் கொடுக்கப்பட்டு இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் என்ற வகையில் அமைந்திருக்கும். ஒவ்வொரு வினாவிற்கான விடைக்கும் மூன்று மதிப்பெண்கள்.

☞ **34ஆவது வினா(கட்டாய வினா)** செய்யுள் மனப்பாடப் பகுதியிலிருந்து அ அல்லது ஆ என்ற வகையில் இரண்டு பாடல்கள் கேட்கப்படும். **ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விடையளித்தால் போதும்.**

- அன்னை மொழியே
- முல்லைப்பாட்டு
- காசிக்காண்டம்
- பெருமாள் திருமொழி
- நீதி வெண்பா
- கம்பராமாயணம்
- சிலப்பதிகாரம்
- தேம்பாவணி
- காலக்கணிதம்
- முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்
- திருவிளையாடற் புராணம்

ஆகிய மனப்பாடப் பாடல்களை மனனம் செய்து அடிக்கடி எழுதிப் பார்த்துக் கொண்டால் இவ்வினாவிற்கு எளிதாக விடையளிக்கலாம்.

☞ மற்ற இரண்டு வினாக்கள் பாடநூல் வினாக்களிலிருந்தோ அல்லது உள்ளிருந்தோ கேட்கப்படலாம். எனவே பாடநூலில் உள்ள செய்யுள் சிறுவினாக்களுக்கான விடைகள் அனைத்தையும் கவனமாக புரிந்து கொண்டு படித்திடுங்கள்.

## பிரிவு - 3

★ **பிரிவு – 3 ல் (35 – 37)** இலக்கணப் பகுதியிலிருந்து மூன்று வினாக்கள் கொடுக்கப்பட்டு இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் என்ற வகையில் அமைந்திருக்கும். ஒவ்வொரு வினாவிற்கான விடைக்கும் மூன்று மதிப்பெண்கள்.

- **35ஆவது வினா** இலக்கண வினா
- **36ஆவது வினா** அலகிட்டு வாய்பாடு எழுதுதல்
- **37ஆவது வினா** அணியிலக்கணம் எழுதுதல்

☞ இவ்வினாக்களில் அலகிட்டு வாய்பாடு எழுதுதலையும் அணியிலக்கணம் எழுதுதலையும் மிக எளிதாக எழுதலாம். எனவே அவற்றில் பயிற்சிகளை மேற்கொண்டால் முழு மதிப்பெண்களையும் பெறலாம்.

☞ **இயல் 3** மற்றும் **இயல் 6** ஆகியவற்றில் உள்ள திருக்குறள்களை அலகிட்டு வாய்பாடு எழுதிப் பழகுங்கள். பாடநூலின் இறுதியில் கொடுக்கப்பட்ட திருக்குறள்கள் அலகிட்டு வாய்பாடு எழுதுவதற்கு உகந்ததன்று. ஏனெனில் அவை மாணவர்கள் எளிதில் படித்துப் பொருள் புரிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் குறட்பாக்களின் சொற்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன.

☞ அணியிலக்கணத்தைப் பொறுத்தவரை

- தற்குறிப்பேற்ற அணி
- தீவக அணி
- நிரல்நிறை அணி
- தன்மையணி

மற்றும் திருக்குறள் பகுதியில் அணி பயின்று வந்துள்ள குறட்பாக்கள் (இயல் மூன்றில் **9, 11, 20**, இயல் ஆறில் **5, 8, 15, 18, 19, 20**) ஆகியவற்றைப் புரிந்து படித்துக் கொள்ளுங்கள்.

☞ இலக்கண வினாவைப் பொறுத்தமட்டில் பாடநூல் சிறுவினாக்கள் பகுதியில் உள்ள இலக்கண வினாக்களுக்கான விடைகளைக் கவனத்துடன் படித்துக் கொள்ளுங்கள்.

## *பகுதி – IV : ஐந்து மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 25)*

★ **பகுதி – 4ல் (38 – 42)** 25 மதிப்பெண்களுக்கான ஐந்து வினாக்கள் இடம் பெற்றிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கான விடைக்கும் ஐந்து மதிப்பெண்கள்.

☞ **38வது வினா** அ அல்லது ஆ என்ற அமைப்பில் செய்யுள் பகுதி நெடுவினாக்களிலிருந்து இரண்டு வினாக்கள் கேட்கப்படும். ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்க வேண்டும். பாடநூல் செய்யுள் நெடுவினாக்கள் அனைத்தையும் படித்துக் கொள்ளுங்கள்.

☞ **39ஆவது வினா** அ அல்லது ஆ என்ற அமைப்பில் கடிதம் எழுதுதல் வினா கேட்கப்படும். இக்கடிதங்களில் புகார்க் கடிதம் ஒன்றும் வாழ்த்துக் கடிதம் அல்லது நண்பனுக்கு மடல் ஒன்றும் கேட்கப்படும். ஏதேனும் ஒரு கடிதத்தை மட்டும் எழுதினால் போதும். எவ்வகையில் கடிதம் கேட்கப்பட்டாலும் எழுதும் வகையில் பயிற்சிகளை மேற்கொள்வது இப்பகுதியில் முழு மதிப்பெண்களைப் பெற்றுத் தரும்.

☞ **40ஆவது வினா** படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் எழுதுதல், காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல், கதையை நிறைவு செய்க, கொடுக்கப்பட்ட தலைப்பில் கவிதை எழுதுதல் ஆகிவற்றில் ஏதேனும் ஒரு வினா கேட்கப்படும். இது மாணவர்களின் சிந்தனைத் திறனை வெளிக்கொணரும் வினா என்பதால் மாணவர்கள் தம் சிந்தனையில் உதித்தவற்றை எழுதுதல் சிறப்பு. **வாசிப்பு ஒன்றே இப்பகுதியில் முழு மதிப்பெண்களைப் பெற உதவும் என்பதை மனதில் இருத்துங்கள்.**

☞ **41ஆவது வினா** படிவத்தை நிரப்புதல். தமிழக அரசால் சமீபத்தில் வெளியிடப்பட்ட நான்கு வகைப் படிவங்களிலிருந்து ஏதேனும் ஒரு படிவத்தைத் தேர்வு செய்து நிரப்ப வேண்டும். அப்படிவங்கள் இந்நூலின் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து பயிற்சி செய்வதன் மூலம் முழு மதிப்பெண்களையும் பெறலாம். இப்படிவங்களில் வினாவில் கொடுக்கப்பட்ட தகவல்களைக் கொண்டே நிரப்ப வேண்டும்.

- நூலக உறுப்பினர் படிவம்
- மேல்நிலை வகுப்பு மாணவர் சேர்க்கை விண்ணப்பம்
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்
- பணிவாய்ப்பு வேண்டி தன் விவரப் படிவம் நிரப்புதல்

ஆகியன மேற்கண்ட வரிசை முறைப்படி பொதுத் தேர்வு விடைத்தாளில் தைக்கப்பட்டிருக்கும். கொடுக்கப்பட்ட வினாவிற்கேற்ற படிவத்தை தேர்வு செய்து வினா எண்ணை அப்படிவத்தில் எழுதி நிரப்ப வேண்டும்.

***குறிப்பு*** : படிவம் நிரப்புதலில் உங்களுடைய பெயரையோ அல்லது உங்களைப் பற்றிய எந்த தகவலையும் எழுதி விடக்கூடாது. அவ்வினாவில் கொடுக்கப்பட்ட விவரங்களைக் கொண்டே நாம் அப்படிவத்தை நிரப்ப வேண்டும். விடைத்தாளின் முதல் பக்கங்களில் இணைக்கப்பட்டுள்ள நான்கு படிவங்களில் எந்தப் படிவம் கேட்கப்பட்ட வினாவிற்கு சரியாகப் பொருந்துகிறது என்பதைப் புரிந்து கொண்டு அப்படிவத்தைத் தேர்வு செய்து நிரப்ப வேண்டும்.

***இதற்கான மாதிரி வினா*** :

*கண்ணன் என்பவரின் மகன் வளவன் பத்தாம் வகுப்பில் 500க்கு 425 மதிப்பெண்கள் பெற்று மேல்நிலை வகுப்பில் கணிதப் பிரிவில் தமிழ் வழியில் சேர விரும்புகிறார். அவருடைய பிறந்த தேதி 15.05.2004. அவர் தமிழ்ப்பாடத்தில் 88, ஆங்கிலப் பாடத்தில் 78, கணிதப் பாடத்தில் 80, அறிவியல் பாடத்தில் 92, சமூக அறிவியல் பாடத்தில் 86 மதிப்பெண்களும் பெற்றுள்ளார். அவருடைய பத்தாம் வகுப்பு பதிவெண் 5264756. கடந்த 2019 மார்ச் மாதம் அவர் பத்தாம் வகுப்பினை தமிழ் வழியில் படித்து தேர்ச்சி பெற்றுள்ளார். அவருடைய தாயாரின் பெயர் கோமதி. 45, நேரு நகர், திண்டிவனம் என்ற முகவரியில் பெற்றோருடன் வசித்து வருகிறார். தேர்வர் தன்னை வளவனாக பாவித்து இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினை தேர்ந்தெடுத்து நிரப்பவும்.*

☞ **42ஆவது வினா** அ அல்லது ஆ என்ற வகையில் அமைந்திருக்கும். இவ்வினா **பாடநூலில் உள்ள நிற்க அதற்குத் தக அல்லது மொழியோடு விளையாடு அல்லது மொழிபெயர்த்தல்** ஆகிய பகுதிகளிலிருந்து கேட்கப்படும். பாடநூல் வினாக்கள் என்பதால் இப்பகுதியில் மாணவர்கள் முழு மதிப்பெண்களையும் பெற தொடர் பயிற்சி மட்டும் போதுமானது.

## செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

**(குறிப்பு:** மொழிபெயர்ப்பு வினா கேட்கப்பட்டால் செவி மாற்றுத் திறனாளர்களுக்காக மாற்று வினாவாக உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல் வினா கொடுக்கப்பட்டிருக்கும். பொது மாணவர்கள் அவ்வினாவைத் தவிர்த்திட வேண்டும். அவ்வினா எளிதாக இருக்கும் என்பதால் அதை எழுதக் கூடாது)

## பகுதி – V : எட்டு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 24)

★ **பகுதி – 5ல் (43 – 45)** 24 மதிப்பெண்களுக்கான மூன்று வினாக்கள் இடம் பெற்றிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கு எட்டு மதிப்பெண்கள்

- ☞ **43ஆவது வினா அ** அல்லது **ஆ** என்ற வகையில் அமைந்திருக்கும். இவ்வினாக்கள் உரைநடை நெடுவினாக்கள் ஆகும். பாடநூல் வினாக்களிலிருந்தோ அல்லது பாடநூல் உள்ளிருந்தோ கேட்கப்படலாம். இவ்வினாவிற்கு உரிய விடையை உள் தலைப்புகளிட்டு தெளிவாக எழுதினால் மட்டுமே முழு மதிப்பெண்களைப் பெறலாம்.
- ☞ உரைநடை தொடர்பான பாடல்கள் ஏதேனும் கொடுக்கப்பட்டு அப்பாடலின் கருத்தையும் அப்பாடலில் இடம்பெற்றுள்ள பா நயத்தையும் விரிவாக உரை செய்க என்ற அமைப்பிலும் நெடுவினா கேட்கப்படலாம்.
- ☞ **44ஆவது வினா அ** அல்லது **ஆ** என்ற வகையில் அமைந்திருக்கும்.
  - இவ்வினாக்கள் துணைப்பாட (விரிவானம்) நெடுவினாக்கள்.
  - விரிவானம் (துணைப்பாடம்) பகுதியில் உள்ள கதைகளின் சுருக்கம்
  - கதை வழியே வெளிக்கொணரப்படும் தத்துவங்கள்
  - அழகியல்
  - பொருண்மைகள் ஆகியவை பற்றியும்
  - அறிவியல், மொழி தொடர்பான ஆழமான கருத்துகள் பற்றியும் வினாக்கள் கேட்கப்படும்
  - உள் தலைப்புகளிட்டு கட்டுரை வடிவில் எழுதினால் முழு மதிப்பெண்களையும் எளிதாக பெறலாம். கதைகளின் நோக்கினையும் போக்கினையும் உணர்ந்து கற்றால் இவ்வினாக்களுக்கு விடையளிப்பது மிக எளிதாகும்.
- ☞ **45ஆவது வினா அ** அல்லது **ஆ** என்ற வகையில் அமைந்திருக்கும். இவ்வினாக்கள் பொதுக்கட்டுரை அமைப்பிலானவை.
  - குறிப்புகள் அல்லது குறிப்புச் சட்டகம் கொடுக்கப்பட்டிருக்கும். அக்குறிப்புகளையொட்டி உள் தலைப்புகளிட்டு கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும்.
  - சான்றோர் வளர்த்த தமிழ் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக என்பது பொதுவான கட்டுரை. ஆனால் "குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் அமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். இக்கருத்தைக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக என்று குறிப்புகள் கொடுக்கப்பட்டால் அக்குறிப்புகளில் உள்ள சிற்றிலக்கியங்களைப் (பிள்ளைத்தமிழ், சதகம், பரணி, கலம்பகம், உலா, அந்தாதி, கோவை) படைத்த புலவர்களைப் பற்றியும் அவர்களால் தமிழ் எவ்வாறு வளர்க்கப்பட்டது என்பது பற்றியுமே எழுத வேண்டும். வேறு புலவர்களைப் பற்றி எழுதக் கூடாது.
  - அதைப் போலவே 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக என்பது பொதுவான கட்டுரை. ஆனால் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுக. முன்னுரை – விண்வெளியில் தமிழரின் அறிவு – கல்பனா சாவ்லா – விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை – முடிவுரை என்று கொடுக்கப்பட்டிருந்தால் அக்குறிப்புகளை உள் தலைப்புகளாக அமைத்து அக்குறிப்புகளுக்குரிய கருத்துகளை எழுத வேண்டும்.
  - ஆகவே கட்டுரை வினாக்களைப் பொறுத்தவரை வினாக்களை நன்கு படித்து புரிந்து கொண்டு விடைகளை எழுதுவது முக்கியம்.

## இலக்கணப் பகுதிகள் ஒரு பார்வை

| இயல் - 1 : எழுத்து, சொல் | |
|---|---|
| ★ **உயிரளபெடை :** செய்யுளில் ஓசை குறையும்போது, அதனை நிறைவுசெய்ய, மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கிற உயிர் நெட்டெழுத்துகள் ஏழும் தத்தம் அளவில் நீண்டு ஒலிக்கும். | **எ.கா :** • அம்மா**அ** • தம்பீ**இ** |
| ★ **ஒற்றளபெடை :** செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவுசெய்ய மெய்யெழுத்துகளான ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும் ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடை. | **எ.கா :** • எஃஃகிலங்கிய கையராய் • வெஃஃகுவார்க்கில்லை |
| ★ **முதனிலைத் தொழிற்பெயர் :** விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல் ஆகும். | **எ.கா :** • தட்டு, உரை, அடி |
| ★ **முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் :** விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வரும் தொழிற்பெயர்களாகும். | **எ.கா :** • கெடு - கேடு (கெடுதல்) • சுடு - சூடு (சுடுதல்) |
| **இயல் - 2 : தொகைநிலைத் தொடர்கள்** | |
| ★ **தொகைநிலைத்தொடர் :** பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் பெயர்ச்சொல்லும் சேரும் தொடரின் இடையில், வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ தொக்கி (மறைந்து) இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் நிற்கும். | கரும்பு தின்றான். |
| ★ **வேற்றுமைத்தொகை :** ஒரு தொடரில் வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், கு, இன், அது, கண்) ஆகியவற்றுள் ஒன்று மறைந்து வந்து பொருள் உணர்த்தும். | மதுரை சென்றார் |
| ★ **உருபும் பயனும் உடன்தொக்க தொகை :** ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பயனை விளக்கும் பயனும் சேர்ந்து மறைந்து வரும் | தேர்ப்பாகன் |
| ★ **வினைத்தொகை :** காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க, வினைப்பகுதியைத் தொடர்ந்து ஒரு பெயர் வந்து ஒரு சொல்லைப் போல் நடப்பது ஆகும். | வீசுதென்றல் கொள்களிறு |
| ★ **பண்புத்தொகை :** நிறம், வடிவம், சுவை, அளவு முதலானவற்றை உணர்த்தும் பண்புப்பெயருக்கும் அதுதழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் "மை" என்னும் பண்பு விகுதியும், ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வரும். | செங்காந்தள் வட்டத்தொட்டி |
| ★ **இருபெயரொட்டுப் பண்புத்தொகை :** சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு தொக்கி வருவதாகும். | மார்கழித் திங்கள் |
| ★ **உவமைத்தொகை :** உவமைக்கும் பொருளுக்கும் (உவமேயம்) இடையில் உவமஉருபு மறைந்து வருவது ஆகும். | மலர்க்கை |
| ★ **உம்மைத்தொகை :** இருசொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வரும். | அண்ணன் தம்பி |
| ★ **அன்மொழித் தொகை :** வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்கள் அவை அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தரும். | சிவப்புச்சட்டை பேசினார். |

## இயல் - 3 : தொகாநிலைத் தொடர்கள்

| | |
|---|---|
| ★ **எழுவாய்த்தொடர்** : எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது ஆகும். | **இனியன்** கவிஞர் - பெயர்<br>காவிரி **பாய்ந்தது** - வினை<br>பேருந்து **வருமா?** - வினா |
| ★ **விளித்தொடர்** : விளியுடன் வினை தொடர்வது ஆகும். | **நண்பா** எழுது! |
| ★ **வினைமுற்றுத்தொடர்**: வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது ஆகும் | **பாடினாள்** கண்ணகி |
| ★ **பெயரெச்சத்தொடர்** : முற்றுப்பெறாத வினை, பெயர்ச்சொல்லைத் தொடர்வது ஆகும். | **கேட்ட** பாடல் |
| ★ **வினையெச்சத்தொடர்** : முற்றுப் பெறாத வினை, வினைச்சொல்லைத் தொடர்வது ஆகும். | **பாடி** மகிழ்ந்தனர் |
| ★ **வேற்றுமைத் தொடர்** : வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள் ஆகும். | கட்டுரையைப் படித்தாள்**(ஐ)**<br>அன்பால் கட்டினார்**(ஆல்)** |
| ★ **இடைச்சொல் தொடர்** : இடைச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது ஆகும். | மற்றொன்று– **மற்று** + ஒன்று |
| ★ **உரிச்சொல் தொடர்** : உரிச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது ஆகும். | **சாலச்** சிறந்தது |
| ★ **அடுக்குத்தொடர்** : ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித் தொடர்வது ஆகும். | **வருக! வருக! வருக!** |

## இயல் - 4 : பொது

- ★ திணை வழுவமைதி - *"என் அம்மை வந்தாள்"*
- ★ பால் வழுவமைதி - *"வாடா இராசா, வாடா கண்ணா" (பெண்ணை அழைப்பது)*
- ★ இட வழுவமைதி - *"இந்த மாறன் ஒருநாளும் பொய் கூறமாட்டான்"(மாறனே கூறுவது)*
- ★ கால வழுவமைதி - *குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்.*
- ★ மரபு வழுவமைதி - *"கத்துங் குயிலோசை – சற்றே வந்து காதிற் படவேணும்" – பாரதியார்.*

## இயல் - 5 : வினா, விடை வகை, பொருள்கோள்

| | |
|---|---|
| **வினா**<br>ஆறு வகைப்படும் | அறிவினா, அறியா வினா, ஐய வினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா |
| **விடை**<br>எட்டு வகைப்படும் | சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை |
| **பொருள்கோள்**<br>எட்டு வகைப்படும் | ஆற்றுநீர்ப் பொருள்கோள், மொழிமாற்றுப் பொருள்கோள், நிரல்நிறைப் பொருள்கோள், விற்பூட்டுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள் |

## இயல் - 6 : அகப்பொருள் இலக்கணம்

| திணை | ஐவகை நிலங்கள் | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலைசார்ந்த இடமும் | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் | கார்காலம் | மாலை |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | கடலும் கடல்சார்ந்த இடமும் | ஆறு பெரும்பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | சுரமும் சுரம் சார்ந்த இடமும் | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

| பெரும்பொழுது | மாதங்கள் | சிறுபொழுது | நேரங்கள் |
|---|---|---|---|
| கார்காலம் | ஆவணி, புரட்டாசி | காலை | காலை 6 மணிமுதல் 10 மணிவரை |
| குளிர்காலம் | ஐப்பசி, கார்த்திகை | நண்பகல் | காலை 10 மணிமுதல் 2 மணிவரை |
| முன்பனிக்காலம் | மார்கழி, தை | எற்பாடு | பிற்பகல் 2 மணிமுதல் 6 மணிவரை |
| பின்பனிக்காலம் | மாசி, பங்குனி | மாலை | மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை |
| இளவேனிற்காலம் | சித்திரை, வைகாசி | யாமம் | இரவு 10 மணிமுதல் இரவு 2 மணிவரை |
| முதுவேனிற்காலம் | ஆனி, ஆடி | வைகறை | இரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை |

## இயல் - 7 : புறப்பொருள் இலக்கணம்

| | |
|---|---|
| **வெட்சி** | ஆநிரைகளைக் கவர்தல் வழக்கமாக இருந்தது. ஆநிரைகளைக் கவர்ந்துவர வெட்சிப் பூவினைச் சூடிக்கொண்டு செல்வர் |
| **கரந்தை** | கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மீட்கச்செல்வர். |
| **வஞ்சி** | மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணை. |
| **காஞ்சி** | தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித்திணை. |
| **நொச்சி** | கோட்டையைக் காத்தல் வேண்டி உள்ளிருந்தே முற்றுகையிட்ட பகையரசனோடு நொச்சிப்பூவைச் சூடி உள்ளிருந்தே போரிடுவது நொச்சித்திணை. |
| **உழிஞை** | மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் அதனைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை. |
| **பாடாண்** | பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, பாடாண்திணை. |
| **பொதுவியல்** | வெட்சி முதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது, பொதுவியல் திணையாகும். |

www.kalvikural.com


## இயல் - 8 : பா – வகை, அலகிடுதல்

★ **செப்பலோசை** : இருவர் உரையாடுவது போன்ற ஓசை - வெண்பாவிற்கு. **எ.கா** : திருக்குறள், நாலடியார்

★ **அகவல் ஓசை** : ஒருவர் பேசுவது போன்றது. சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை ஆசிரியப்பா. **எ.கா** : சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை

★ **துள்ளலோசை** : கலிப்பாவிற்குரியது. கன்று துள்ளியது போன்று தாழ்ந்து உயர்ந்து வரும் ஓசை.

★ **தூங்கலோசை** : சீர்தோறும் துள்ளாது தூங்கி வரும் ஓசை வஞ்சிப் பாவிற்கு உரியது.

| | |
|---|---|
| ★ **வெண்பா** ஐந்து வகை | குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா ப∴றொடை வெண்பா |
| ★ **ஆசிரியப்பா** நான்கு வகை | நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா அடிமறிமண்டில ஆசிரியப்பா. |
| ★ **தளை** ஏழு வகை | இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, நேர்ஒன்றிய ஆசிரியத்தளை, நிரைஒன்றிய ஆசிரியத்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை, கலித்தளை |

## இயல் - 9 : அணிகள்

| | |
|---|---|
| ★ **தன்மை அணி** | எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப்பாடுவது தன்மை அணி ஆகும்.<br>**எ.கா** : *‘எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ்*<br>*சொன்முறை தொடுப்பது தன்மையாகும்’.* - **தண்டியலங்காரம் - 27** |
| ★ **தீவக அணி** | தீவகம் என்னும் சொல்லுக்கு விளக்கு என்பது பொருள். ஓர் அறையில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல்போல செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலுள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குதல்.<br>**எ.கா** : *“சேந்தன வேந்தன திருநெடுங்கண், தெவ்வேந்தர்*<br>*ஏந்து தடந்தோள், இழிகுருதி - பாய்ந்து*<br>*திசையனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும்*<br>*மிசை அனைத்தும் புள்குலமும் வீழ்ந்து.”* |
| ★ **தற்குறிப்பேற்ற அணி** | இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன்குறிப்பை ஏற்றிக் கூறுவது.<br>**எ.கா** : *“போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி*<br>*வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட”* |
| ★ **நிரல்நிறை அணி** | சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வதே நிரல் நிறை அணி எனப்படும்.<br>**எ.கா** : *“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*<br>*பண்பும் பயனும் அது.”* |

# நூலக உறுப்பினர் படிவம்

________________________________மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை /ஊர்ப்புற நூலகம்________________________

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் : உறுப்பினர் எண்:

1. பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த தேதி :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி எண் :
7. அஞ்சல் முகவரி :

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் ______________________________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. ______ சந்தா தொகை ரூ. ______ ஆக மொத்தம் ரூ. ______ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம்: தங்கள் உண்மையுள்ள,

நாள்:

திரு / திருமதி / செல்வி/ செல்வன் ______________________________ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

# மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

**சேர்க்கை எண்:** **தேதி:** **வகுப்பும் பிரிவும்:**

1. மாணவ / மாணவியின் பெயர் :

2. பிறந்த தேதி :

3. தேசிய இனம் :

4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :

5. வீட்டு முகவரி :

6. இறுதியாக படித்து முடித்த வகுப்பு :

7. பயின்ற மொழி :

8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணக்கு | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :

11. தாய்மொழி :

12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ / மாணவியின் கையெழுத்து

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்

1. மாணவ ரின் பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த தேதி :
4. தேசிய இனம் :
5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
6. இரத்த வகை :
7. உயரம் மற்றும் எடை :
8. வீட்டு முகவரி :
9. தொலைபேசி / அலைபேசி எண் :
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
11. பள்ளியின் முகவரி :
12. சேர விரும்பும் விளையாட்டு :

சேர்க்கை எண்:

மாணவரின் கையெழுத்து

தேதி :

இடம்:

பெற்றோர் / பாதுகாவலரின் கையெழுத்து

# பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் நிரப்புதல்

1. பெயர் :

2. பாலினம் :

3. பிறந்த நாள் மற்றும் வயது :

4. தேசிய இனம் :

5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :

6. வீட்டு முகவரி :

7. தொலைபேசி / அலைபேசி எண் :

8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

9. தாய்மொழி :

10. பயின்ற மொழிகள் :

11. தட்டச்சு :

12. கணினி :

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் ________________________________ பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,